DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 227 /2025 |
| Deposition of witness | : | P.W-2 |
| List of witness | : | A.W |
| Name | : | கோகுலகண்ணன் |
| Father's /Husband Name | : | நம்பியப்பசாமி |
| Village | : | பேரளம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 40 |
| Occupation | : | காவல் ஆய்வாளர் பேரளம் காவல் நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 25th day February 2026.
Accused present.

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது பேரளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எனக்கு முன்னால் மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் ஆய்வாளர் சுகுணா என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். குற்ற எண்.171/2025 வழக்கின் வழக்கு கோப்பு ஆவணங்களை பார்வையிட்டு இவ்வழக்கில் நான் சாட்சியமளிக்கிறேன். கடந்த 18.04.2025-ம் தேதி 18.00 மணிக்கு முதல்நிலைக்காவலர் சுரேஷ் மற்றும் காவலர் மகேஷ்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் விக்னேஷ்குமார் என்பவரும் நன்னிலம் காவல் நிலைய ஆய்வாளர் சுகுணா என்பவருடன் பேரளம் காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதிகளில் மதுவிலக்கு தடுப்பு சம்பந்தமாக ரோந்து பணியில் இருந்த போது A. கிளியனூர் கடைத்தெரு கண்காணித்து வந்தபோது அங்கு நின்றுகொண்டிருந்த பின்னர் பெயர் விலாசம் கேட்டுத்தெரிந்த ராமலிங்கம், த/பெ. ராஜா, திருவாரூர் சாலை, கழனிவாசல், மங்கைநல்லூர் என்பவர் எங்களைக் கண்டதும் ஓடியதால் அவர் நின்ற இடத்தை சோதனை செய்த போது சுமார் 15 லிட்டர் பிடிக்கக்கூடிய 2 பாலிதீன் பைகளில் தலா 10 லிட்டர் வீதம் 20 லிட்டர் பாண்டி சாராயம் இருந்துள்ளது. அதை முகர்ந்து பார்க்க ஒரு விஷநெடியுடன் கண் எறிச்சலுடன் குமட்டலும் வந்துள்ளது. மேற்படி சாராயத்தை மனிதர்கள் அருந்தினார் மனித உயிருக்கு கேடுவிளைவிக்கும் என தெரிந்தும் அவர் அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாததால் அவரை காரணம் கூறி கைது செய்து அவர்கள் முன்னிலையில் 19.45 மணிக்கு அவரிடமிருந்த சாராயத்தை கைப்பற்றி அந்த இடத்திலேயே கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார். தனிநபர் சாட்சிகள் யாரும் சாட்சியாக வர முன்வராத காரணத்தினால் மேற்கண்ட கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் சுரேஷ் மற்றும் மகேஷ்குமார் என்பவரும் சாட்சியாக செய்துள்ளார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு, கடந்த

22.05.2022–ம் தேதி 11.30 மணிக்கு பேரளம் காவல் நிலைய முன்புறம் கைப்பற்றப்பட்ட சுமார் 15 லிட்டர் பிடிக்கக்கூடிய 2 பாலிதீன் பைகளில் தலா 10 லிட்டர் வீதம் 20 லிட்டர் பாண்டி சாராயத்தை பிரிவு 32 TNP Act ன் கீழ் கொட்டி அழித்து மகஜர் தயார் செய்துள்ளார். அந்த அழிப்பு மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரியுடன் காவல் நிலையம் வந்து காவல் ஆய்வாளர் எதிரி ராமலிங்கம் என்பவர் மீது குற்ற எண்.171/2025 சட்டப்பிரிவுகள் 4 (1) (C) r/w 4(1–A) (ii) Tamil Nadu Prohibition Amendment Act 2024 – மீது வழக்கு பதிவு செய்துள்ளார். அவர் பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது, பின்பு முதல்நிலைக்காவலர் சுரேஷ் மற்றும் காவலர் மகேஷ்குமார் மற்றும் உதவி அய்வாளர் விக்னேஷ்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியுடன் காவல் நிலையம் வந்து எதிரிக்கு திரேக பரிசோதனை முடித்து தக்க வழிகாவல் மூலம் மாண்புமிகு மாவட்ட உரிமையியல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நன்னிலம் அவர்களிடம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். இத்துடன் புலன் விசாரணை முடித்து சாட்சிகளை முறையாக விசாரணை செய்து சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் கடந்த 22.05.2025–ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவான 4(1) (C) r/w 4(1–A) (ii) TNP Act லிருந்து 4(1) (C) TNP Act சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், 22.05.2025–ம் தேதி எதிரி வைரவன் என்பவர் மீது 4 (1) (C) TNP Act – ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் சார்பு ஆய்வாளருடன் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எவ்வித சாராயத்தையும் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரியை சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசர் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதில் சார்பு ஆய்வாளர் எனது உயரதிகாரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கானது புள்ளி விவரத்திற்காக போடப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***

District Muncif -Cum- Judicial Magistrate,
Nannilam.